செய்தி வெளியீடு　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　　நாள் : 19.10.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும் மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்களும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து ரூ.43.05 கோடி நிதியை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கினர்.**

******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி இன்று (19.10.2023) பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில், மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் மற்றும் மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் தலைமையில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30.30 கோடி நிதி, பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திரப் பொறியியல் துறையின் மூலம் 51 ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Skid Steer Loaders) கொள்முதல் செய்வதற்காக ரூ.12.75 கோடி நிதி என மொத்தம் ரூ.43.05 கோடி நிதியை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கினர்.

**மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் பேசியதாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** உத்தரவின்படி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சட்டமன்றத்தில் இலாக்காக்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டால், எந்தப் பணியினை முதலில் செய்ய வேண்டும் என்றும், அதற்கான திட்ட அறிக்கை மற்றும் தொகையை முடிவு செய்து, பணியினை உடனடியாக தொடங்கிட வேண்டும் என்பதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் என்னென்ன பணிகளை முதலில் மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து, அதற்கான விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் எனவும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டவுடன், முடிவு செய்யப்பட்ட பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், மழை பெய்வதற்கு முன்பதாக அனைத்து பணிகளையும் தொடங்கப்பட வேண்டும் என உத்தரவிட்டிருந்தார்கள்.

அதனடிப்படையில், அனைத்துப் பகுதிகளுக்கும் இந்த வருடம் ஒதுக்கப்பட்ட தொகையில் 5 சதவீதம் தவிர, மற்ற அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அனைத்து சாலைகளும் முழுமையாக போடப்பட்டுள்ளது. மழைக்காலங்களை எதிர்கொள்ளும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்வாய்கள் மற்றும் நீர்நிலைகளை சுத்தம் செய்யும் பணிகள் மாவட்டங்கள் தோறும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னையைப் பொறுத்தவரை, சாலைப் பணிகள் உள்ளிட்ட பணிகளுக்காக கிட்டத்தட்ட ரூ.2000 கோடியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்தார்கள். இவற்றில் முதற்கட்டமாக 5000 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைக்காலங்களில் பொதுமக்களை தங்க வைப்பதற்கான நிவாரண மையங்கள் மற்றும் மையங்களில் தங்குபவர்களுக்கு தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதிகள் ஆகியவை தயார்நிலையில் உள்ளது. மழையின் காரணமாக விழும் மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றும் வகையில் மர அறுவை இயந்திரங்கள், மழைநீர் தேங்கினால் அவற்றை அகற்றும் வகையில் 700க்கும் மேற்பட்ட மோட்டார் பம்புகள் ஆகியவை தயார்நிலையில் உள்ளது. மேலும், நீர்நிலைகளில் உள்ள ஆகாயத்தாமரைகள் மற்றும் வண்டல்கள் அகற்றப்பட்டு மழைநீர் எளிதில் செல்லும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையிலும், பொதுமக்களும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அனைத்து நடவடிக்கைகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

**மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் சரக்குந்து முனையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக நீண்டநாட்களாக இருந்த கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் உடனடியாக பெருநகர சென்னை மாநகராட்சியின் வளர்ச்சிக்கு அந்த நிதியை ஒதுக்கீடுமாறு உத்தரவிட்டதின்பேரில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மாதவரம் பேருந்து நிலையம் மற்றும் மாதவரம் சரக்குந்து முனையத்திற்கு ரூ.30.30 கோடிக்கான காசோலையும் மற்றும் அதேபேல் சென்னையில் சிறுசிறு தெருக்களில் இருக்கின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றுவதற்கு மிகுந்த பயனுள்ள இயந்திரமான பாப்கேட் என்று சொல்லக்கூடிய இயந்திரத்தை வாங்குவதற்காக ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் 51 பாப்கேட் ஸ்கிட் ஸ்டீர் லோடர்கள் (51 Bobcat Skid Steer Loaders) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் திட்ட நிதியிலிருந்து மொத்தம் ரூ.43.05 கோடிக்கான காசோலைகள் இன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.சுதர்சனம் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு.மு.மகேஷ் குமார் அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் திரு.சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) திரு.சங்கர்லால் குமாவத், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.